ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2043/13 - 2017 ඔක්තෝබර් මස 30 වැනි සඳුදා - 2017.10.30

*2043/13 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*அரசாங்க சேவை ஆணைக்குழு*

**அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்**

*1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள, இல. 2014/3 மற்றும் 2017.04.11 ஆந்திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள "அ" அட்டவணையில் இல. 07 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்பு பின்வருமாறு 2017.10.30 ஆந் திகதி முதல் செயற்படும் வண்ணம் இத்தால் திருத்தப்படுகின்றது :-*

*அட்டவணை "அ"*

| நிரல் I<br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 7. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கீழ் வரக்கூடிய இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு/ ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாக நியமனம் செய்தல்<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும்<br>III. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/ 2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண் டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல். |

PG 3736 — 107 (2017/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*அட்டவணை "அ" (தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br><br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப் பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித் துரைக்கப் பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப் பாடுகள்<br><br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட நட வடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும் |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட மாகாண கல்விப் பணிப்பாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்புக்கு உள்ளீர்ப்புச் செய்தல்<br><br>II. அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கு/ ஆட்சேர்ப் புத் திட்டத்துக்கு அமைவாக பதவி உயர்வு வழங்குதல். |

2. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட இல. 2014/3 மற்றும் 2017.04.11 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஏ. குலதுங்க,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05,
2017, ஒற்றோபர் 25.

11-721

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.